


சென்ற அத்தியாயத்தில் ஹிஸ்புல்லாவின் அரசியல் திருப்பணிகளைப் படித்துவிட்டு, அப்படியே கண்ணீர் மல்க ஒரு மாநகரப் பேருந்து பிடித்து லெபனானுக்குப் போய், அவர்களுக்கு ஒரு கள்ள ஓட்டாவது போட்டுவிட்டு வரலாம் என்று தோன்றியிருக்குமே?

ரொம்ப உணர்ச்சிவசப்படாமல், லெபனானின் அரசியல் சூழல் மற்றும் ஹிஸ்புல்லாவின் இயல்பு இரண்டையும் புரிந்துகொள்ள முடியுமானாலே போதும். ஒரு பக்கம் எத்தனை தீவிரமாக மக்கள் நலப்பணிகள், தேர்தல் ஜனநாயகம் என்று இயங்குகிறார்களோ, அதற்குச் சற்றும் சளைக்காத தீவிரமுடன் பயங்கரவாதச் செயல்களையும் ஹிஸ்புல்லா செய்வதை முன்னர் பார்த்தோம். இது எப்படிச் சாத்தியம் என்று இந்தியச் சூழலில் உட்கார்ந்துகொண்டு யோசிக்கமுடியாது என்பதையும் கவனித்தோம்.

இப்போது பார்க்க வேண்டிய சங்கதி, ஹிஸ்புல்லாவின் ஆயுத பலம் எப்படிப்பட்டது என்பது. அதைவிட முக்கியம், யார் யாரெல்லாம் அவர்களுக்கு உதவுகிறார்கள், எப்படியெல்லாம் அவர்களின் நெட் ஒர்க் பரவி வலுப்பட்டிருக்கிறது என்பது.

அல் காயிதா, ஹமாஸ் உள்ளிட்ட சகோதர தீ.வா. இயக்கங்களுடன் ஹிஸ்புல்லாவின் நெருக்கமும் தோழமையும் எப்படிப்பட்டது என்பதை விளக்காமலேயே புரிந்துகொள்ளமுடியும். ஆனால், இந்த இயக்கங்களுக்கு அதிகம் இல்லாத ஒரு பெரும் சௌகரியம் ஹிஸ்புல்லாவுக்கு இருக்கிறது. அதுதான், பல்வேறு முஸ்லிம் தேசங்களின் ரெகுலரான, நீடித்த நல்லாதரவு.

அல் காயிதாவுக்குக் கொஞ்சநாள் சூடானும் ஆப்கனிஸ்தானும் உதவி ஒத்தாசைகள் செய்தது தெரியுமல்லவா? ஆனால், கொஞ்சநாள்தான். அம்மாதிரி இல்லாமல், ஹிஸ்புல்லாவுக்கு அதன் தோற்றம் முதல் இன்றுவரை வலுவான நேசக்கரம் நீட்டும் தேசங்கள் மூன்று இருக்கின்றன.

லெபனான், சிரியா, ஈரான். உதவி என்றால் பண உதவி மட்டுமே அல்ல. உதாரணமாக, ஹிஸ்புல்லாவின் ஆன்மிகத் தளமாகவும், சித்தாந்த ரீதியில் எப்போதும் ஹிஸ்புல்லா போராளிகளை வலுவாக வைத்திருப்பதற்கும் ஈரான் செய்யும் உதவிகள், அது செய்யும் பண உதவிகளைக் காட்டிலும் பெரிது.

உலகின் மாபெரும் ஷியா தேசமான ஈரான், ஹிஸ்புல்லாவைத் தான் பெறாத பிள்ளை போலவே வளர்க்கிறது. ஈரானில் நடைபெறும் அனைத்து ஆன்மிக மாநாடுகளிலும் ஹிஸ்புல்லாவின் பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொள்வார்கள். பயிற்சி பெற்ற ஹிஸ்புல்லா போராளிகளுக்கு, ஈரானில்தான் எப்போதும் 'உயர்கல்வி' வழங்கப்படும். ஒவ்வொரு ஹிஸ்புல்லா போராளியும் ஈரானில் உள்ள மதப்பெரியவர்களின் கைகளால், தங்கள் முதல் ஆயுதத்தைப் பெறுவதைத்தான் பெருமையாகக் கருதுகிறார்கள்.

அடுத்தது சிரியா. ஹிஸ்புல்லாவுக்கு இலக்குகளை நிர்ணயித்துத் தருவது சிரியா அரசாங்கம்தான். சிரியாவின் உளவுத்துறையில் இதற்கென்றே தனிப்பிரிவு உண்டு. இஸ்ரேலை மட்டுமே எப்போதும் குறிவைக்கும் ஹிஸ்புல்லா, எங்கெங்கிருந்து தனது தாக்குதலைத் தொடங்கலாம், எப்படி முன்னேறலாம், எங்கு என்ன தடைகள் இருக்கும், இஸ்ரேலியப் படையின் பலம், அவர்களது உத்தேச செயல்திட்டம் போன்றவற்றைக் கண்டறிந்து சொல்வது இவர்களது முக்கியப் பணி.

தேவைப்படும்போது, ஹிஸ்புல்லா போராளிகள் சிரியாவின் தெற்கு எல்லை வழியாக இஸ்ரேலுக்குள் நுழையவும் சிரியா அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. அத்தகைய சமயங்களில், எல்லைப்புறங்களில் முகாம் அமைத்துத் தங்கவோ, பயிற்சி அளிக்கவோ எந்தத் தடையும் இருக்காது. மற்ற நேரங்களில் ஹிஸ்புல்லா சிரியாவுக்குள் அனுமதியின்றி நுழைவதே இல்லை. இது அவர்களுக்குள் எழுதப்படாத ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தை இன்றுவரை ஹிஸ்புல்லா கடைப்பிடித்து வருவதால்தான், சிரியா அவர்களுக்கு அளித்துவரும் ஆதரவும் ஆயுத உதவியும்கூடத் தடையின்றிக் கிடைத்து வருகிறது.

மூன்றாவதாக, ஹிஸ்புல்லாவின் தாயகமான லெபனான். இதைப் பற்றி விளக்கவே வேண்டாம் இல்லையா? தெற்கு லெபனானின் காவல் காக்கும் ஐயனார் என்கிற அந்தஸ்து, அங்கே ஹிஸ்புல்லாவுக்கு இருக்கிறது. தனது ஒவ்வொரு தாக்குதல் திட்டத்தையும் ஹிஸ்புல்லா தவறாமல் லெபனான் அரசிடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொல்லாமல் இருப்பதில்லை. லெபனான் அரசால் பெரிய அளவில் சிரியாவைப் போலவோ, ஈரானைப் போலவோ அவர்களுக்கு உதவமுடியாது என்றாலும், உபத்திரவமின்றிச் செயல்பட ஒத்துழைப்பது ஒன்றே போதும் என்று முடிவு செய்துவிட்டது ஹிஸ்புல்லா.

ஆனால், அறிக்கை அளவில் லெபனான் அரசாங்கம், தான் ஹிஸ்புல்லாவை ஆதரிப்பதில்லை என்றே தொடர்ந்து சொல்லிவருகிறது. சமீபத்திய 2006 யுத்தத்தின் தொடக்கத்தின்போதும், ‘ஹிஸ்புல்லாவின் இந்தத் திடீர் நடவடிக்கை எனக்குத் தெரியாது’ என்றே சொன்னார்கள். இப்படிச் சொல்வதால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை; யாரும் நம்பப்போவதும் இல்லை என்பதால், ஹிஸ்புல்லா தலைமையும் இதையெல்லாம் ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்வதில்லை.

ஒரு தீவிரவாத இயக்கமாகச் செயல்படுவதற்குப் பெரிய புறத்தேவைகள் ஏதுமில்லை. தொடர்ந்து பணம் வரவேண்டும். தொடர்ந்து ஆயுதங்கள் கிடைக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த இரண்டு விஷயங்களுக்குமே ஹிஸ்புல்லாவுக்கு ஈரான் மற்றும் சிரியாவிடமிருந்து போதிய உதவிகள் கிடைத்துவிடுவதால், லெபனான் அரசாங்கம் சும்மா வாயை மூடிக்கொண்டு இருந்தாலே போதும் என்பதுதான் ஹிஸ்புல்லாவின் நிலை.

ஹிஸ்புல்லாவின் ஆயுத பலம் தொடர்பாகக் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது. சில விமானக் கடத்தல் சம்பவங்களின்போதும், ஆள் கடத்தல் வைபவங்களின்போதும் ஹிஸ்புல்லா போராளிகள், பிணைக்கைதிகளுடன் போட்டோ எடுத்து மீடியாவுக்குக் கொடுப்பார்கள். அந்தப் புகைப்படங்களில், அவர்கள் தோளில் ஏந்தி நிற்கும் ஆயுதங்களைப் பார்த்து அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற தேசங்கள் குலை நடுங்கும்.

காரணம், அவை எல்லாம் பெரும்பாலும் அந்தந்த நாடுகளின் தயாரிப்பு. பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கா புழக்கத்துக்கே விட்டிராத ஆயுதங்களெல்லாம் ஹிஸ்புல்லா போராளிகளின் கையில் இருக்கும். எப்படி இது சாத்தியம்?

ஆயுதக் கொள்ளை என்பது ஹிஸ்புல்லாவைப் பொறுத்தவரை ஒரு புனிதமான காரியம். எதற்காகக் கொள்ளை அடிக்கிறோம்? நச்சு சக்திகளை வீழ்த்துவதற்குத்தானே? தப்பே இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அல் காயிதாவில் இந்தக் கொள்ளை நடவடிக்கை கிடையாது. ஆனால், ஹிஸ்புல்லா ஆத்மசுத்தியுடன் அதை இன்றுவரை இடைவிடாமல் செய்துவருகிறது.

ஆனால், ஹிஸ்புல்லாவின் ஆயுத ‘பலத்துக்கு’ இது மட்டும் காரணமல்ல. ஆயுத மார்க்கெட்டைக் கூர்ந்து கவனிப்பதற்கும், பேரம் பேசி வாங்குவதற்கும் ஹிஸ்புல்லாவின் ஜிஹாத் குழுவிலேயே தனியொரு மார்க்கெட்டிங் பிரிவு உண்டு. உலகெங்கும் எங்கெங்கெல்லாம் கறுப்பு மார்க்கெட் இருக்கிறது, எந்த ஊர் சரக்கு நல்ல சரக்கு, எது சொதப்பல் சரக்கு என்பதெல்லாம் இவர்களுக்கு அத்துப்படி.

பொதுவாக ஆயுதங்களை, கத்திரிக்காய் வாங்குவது போல் வாங்கிவிட முடியாது. ஓரளவு ஆயுதப் பரிச்சயமும் தேர்ச்சியும் உள்ளவர்களே கூட, சமயத்தில் ஏமாந்துவிடும் அபாயம் உண்டு.

அல் காயிதா சூடானில் உட்கார்ந்துகொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு மூட்டை மல்லாக்கொட்டை வாங்குவதுபோல வேலைக்கு ஆகாத யுரேனியம் வாங்கி, கோடிக்கணக்கில் ஏமாந்த கதை ஒன்றை முன்னர் பார்த்திருக்கிறோம், நினைவிருக்கிறதா? ஹிஸ்புல்லா இம்மாதிரியான அசட்டு அதிரடி வேலைகளிலெல்லாம் ஒருபோதும் இறங்கியதே இல்லை. குறிப்பாக, அல் காயிதாவுக்கு நேர்ந்த கதியைக் கேள்விப்பட்ட கணத்திலிருந்து ஹிஸ்புல்லாவில் தனியொரு ஆயுத ஆராய்ச்சிப் பிரிவே உருவாக்கப்பட்டது.

இந்தப் பிரிவில் இருப்பவர்கள் போர் வீரர்கள் அல்லர். அவர்களுக்குத் துப்பாக்கியால் குறிபார்க்கத் தெரியாது. ஆனால், ஒரு துப்பாக்கியைக் கொடுத்தால் பார்ட் பார்ட்டாகக் கழற்றி, குடைந்து நோண்டி எடுத்துவிடுவார்கள். ஆயுதமாகப் பயன்படும் ரசாயனங்களின் தன்மை, வீரியம், கலவை விகிதம் போன்றவற்றைத் துல்லியமாக அறிந்தவர்கள். ஒரு குண்டைக் கையில் தூக்கிப் பார்த்த மாத்திரத்தில் தரத்தைச் சொல்லிவிடக் கூடிய விற்பன்னர்கள். அத்தனை பேரும் வேதியியல் மற்றும் இயந்திரவியல் மாஸ்டர்கள். பெரும்பாலும் ராணுவக் கல்லூரிகளில் படித்தவர்கள்.

பெய்ரூத்துக்கு வடக்கே சுமார் நூறு கிலோ மீட்டர் தொலைவில் அல் ஜுதைதா (Al judaydah) என்ற இடத்தில் இருக்கும் ஹிஸ்புல்லாவின் ஆயுதப் பரிசோதனை அலுவலகம், எந்த ஒரு சாஃப்ட்வேர் நிறுவன அலுவலகத்துக்கும் சளைத்ததல்ல. அங்கே வேலை பார்ப்பவர்கள், ஒரு தீவிரவாத இயக்கத்தின் ஊழியர்கள் என்று சொன்னால் யாருமே நம்பமாட்டார்கள். இன் செய்து, டை கட்டி, சாண்ட்விச் கடித்துக்கொண்டு, கால் மேல் கால் போட்டு நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசும் ஆட்கள் அவர்கள். ஆனாலும் செய்கிற வேலை அப்படிப்பட்டது. யாருக்குச் செய்கிறோம் என்பதில் பெருமிதமடையும் நபர்கள்.

இன்றைய தேதியில் ஹிஸ்புல்லாவிடம் இருக்கும் ஆயுதங்களை ஆறு இனங்களாகப் பிரிக்கலாம்.

Mortars என்று சொல்லப்படும் இலேசு ரகத் துப்பாக்கிகள். இதைத் தோளில் வைத்தும் இயக்கலாம். ஒரு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியும் பயன்படுத்தலாம். 82 எம்.எம்., 120 எம்.எம்., 160 எம்.எம் என்று மூன்று அளவுகளில் கிடைக்கும் இந்த ஆயுதம், ஹிஸ்புல்லாவிடம் மொத்தம் சுமார் நூறு இருக்கிறது என்று அமெரிக்கா ஒரு புள்ளிவிவரம் தருகிறது. ஆனால், இந்தத் துப்பாக்கிகளுக்கான குண்டுகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன.

ராக்கெட் லாஞ்சர்கள். 107 எம்.எம்., 122 எம்.எம் என்று இரு ரகங்களாகச் சுமார் ஐம்பது ராக்கெட் லாஞ்சர்கள். இந்த லாஞ்சர்களைப் பயன்படுத்தி ஹிஸ்புல்லா பல்வேறு விதமான ராக்கெட்டுகளை இஸ்ரேலிய இலக்குகளின் மீது செலுத்துகிறது. அந்த ராக்கெட்டுகளின் எண்ணிக்கை குறித்த கணக்கு வழக்கு ஏதுமில்லை. எப்படியும் ஒரு ஐம்பதாயிரம் ராக்கெட்டுகள் வைத்திருப்பார்கள் என்று குத்துமதிப்பாகச் சொல்கிறார்கள்.

Recoilless guns. என்றால், பீரங்கிகளைத் தாக்கி அழிக்கக்கூடிய லேசு ரக ‘தோள்பீரங்கி’ என்று சொல்லலாம். உள்ளே மேட்டரை அடைத்துச் செலுத்தினால், ஊரைச் சுற்றாமல் நேராகப்

போய் பீரங்கிகளைத் தாக்கி அழித்துவிடும். சுமார் 1300 மீட்டர் வரை சென்று தாக்கக்கூடிய இந்த ஆயுதம் சுமார் 25 ஹிஸ்புல்லாவிடம் இருக்கிறது.

பீரங்கிகள்: 122, 130, 155 எம்.எம். அளவுகளில் சுமார் ஐம்பது. இதற்கான வெடிபொருளுக்குக் கணக்கே கிடையாது. சுமார் பதினொன்றிலிருந்து இருபத்துநான்கு கிலோ மீட்டர் வரை துல்லியமாகப் பயணம் செய்து இலக்கைத் தாக்கக்கூடிய உயர் ரக பீரங்கிகள் இவை. லெபனானின் எல்லையிலிருந்து இஸ்ரேலிய கிராமங்களைக் குறிவைத்து, குடியிருப்புப் பகுதிகளின் மீது தாக்குதல் நடத்தும்போது மட்டும் ஹிஸ்புல்லா இந்த ரக பீரங்கிகளைப் பயன்படுத்துகிறது.

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் (Antitank Missiles). Sagger, Millan, Fagot, Tow என்று நான்கு வெவ்வேறு ரகத்தில் இத்தகைய ஏவுகணைகள் பல நூற்றுக்கணக்கில் ஹிஸ்புல்லாவிடம் இருக்கின்றன. இவை அனைத்துமே ஆயிரத்திலிருந்து மூவாயிரம் மீட்டர் தொலைவு சென்று தாக்கக் கூடியவை.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள். இது ஹிஸ்புல்லாவிடம் அதிகம் கிடையாது. SA7 என்கிற ஒரு சுமாரான ஏவுகணை மாடலில் நாலோ ஐந்தோ மட்டும் வைத்திருக்கிறார்கள். இவை சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் உயரத்தில் பறக்கும் விமானங்களை மட்டுமே அழிக்கும். இந்த ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ஹிஸ்புல்லாவிடம் அதிகம் இல்லாத காரணத்தினால்தான், இஸ்ரேல் பெரும்பாலும் தனது விமானப்படையையே லெபனானுக்குள் அனுப்பி குண்டு போடுகிறது.

இவை தவிர, சாதாரணத் துப்பாக்கிகள் பல்லாயிரக் கணக்கிலும் கையெறி குண்டுகள் லட்சக்கணக்கிலும் கண்ணிவெடிகள் சில ஆயிரக்கணக்கிலும் ஹிஸ்புல்லாவிடம் உண்டு.

தனது ஆயுதங்களைப் பராமரிப்பதில் ஹிஸ்புல்லா மிகுந்த கவனமுடன் செயல்படுகிறது. ஏக்ர், ஹைஃபா, ஜெஃபாத், அஃபூலா, ஹதேரா ஆகிய இடங்களில் உள்ள ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கிடங்குகளைச் சுற்றிலும் சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவு வரை ஒரு ஈ, கொசு கூட நெருங்கமுடியாது. யாரும் உள்ளே வரத் தடை செய்யப்பட்ட இடம் என்று போர்டு போட்டே ஆயுதம் பாதுகாக்கும் அமைப்பு அது.